<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

<u>O.S. No. 177/ 2022</u>

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10–வது சட்ட விதிகளின் படி திரு.எம்.சீனிவாசன் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **தணிகையரசு** | **தொழில்** | : | |
| **தந்தை பெயர்** | : | **துரைசாமி** | **கிராமம்** | : | |
| **வயது** | : | 72 | **வட்டம்** | : | **காஞ்சிபுரம்** |
| **நேரம்** | : | **முற்பகல் 11.20** | | : | |

**<u>வா.சா.1 முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் வாதி. நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் . அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும்.

1) கடந்த 22.11.1987 தேதியிட்ட பிரதிவாதி வெங்கடேசன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் (சான்றிட்ட நகல்)தாக்கல் செய்கிறேன். அந்த அடமான பத்திரம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) கடந்த 29.04.1991 தேதியிட்ட சுப்ரமணி என்பவர் பிரதிவாதிக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் . அந்த செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) என் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது (எண்ணிக்கை 3) தாக்கல் செய்கிறேன். அந்த வீட்டு வரி ரசீது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) தாவா சொத்திற்கு என்பெயரில் உள்ள குடிநீர் கட்டண ரசீது (எண்ணிக்கை 7) தாக்கல் செய்கிறேன். அந்த குடிநீர் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.